முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1426

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.08.2023**, வெள்ளிக்கிழமை

1. கந்தவேலன் என் அவதாரமே
கருணை வடிவான ஞான சொரூபமே
சிந்தைவைத்து என்பால் செய்த தவபலமே
சித்தி கூடி இந்த கலியுகத்தில் மாதவசியாக
2. தவசியாக அவதாரம் தான் புரிந்து
தரணிகாக்கும் உத்தம தர்மசேவை
பேருலகமெங்கும் நடத்தி மக்களுக்கு
புண்ணியவழி காட்டும் ஆறுமுக அரங்கனே
3. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 08 ம் நாள், 25.08.2023 வெள்ளிக்கிழமை)
வரமாக அரங்கன் உன் சக்தி
வையகமெங்கும் நிரம்பி வருகுதப்பா
4. தருகின்ற அரங்கன் தர்மம் தான்
தரணியை காத்து நிற்குதப்பா
பெருமை கொண்டு அரங்கன் சன்மார்க்கத்தை
பேருலகம் தாங்கி பிடித்தால் போதும்
5. போதுமப்பா உலகத்தில் தயவுநெறிகொண்ட
பிரணவ சக்திமிகு என்னாட்சி
சரவணச்சுடராக எங்கும் பரவி
சற்குரு உன் வழிகாட்டலில் ஞான ஆட்சி
6. ஆட்சிதான் இந்த பேருலகம் அடையக்கூடும்
அற்புதத்தை அரங்கன் தொண்டர்களுக்கே வாய்ப்பாக தந்துள்ளேன்
ஏற்புகொண்டு இந்த மகா சேவையை
இவ்வுலகோர் எங்கும் நிலை நிறுத்தி செயல்பாட்டால்

7. செயல்பாடு தவபலமாக
சித்திமிகு அரங்கனின் தர்மபலமாக
தயவே வடிவாக மக்களிடை நிரம்பி
தர்ம ஞான ஆட்சிக்காலம் சடுதி கனியும்

8. கனிகின்ற வாய்ப்பை கனிவேலன்
கலியுகத்தில் வரமாக இறக்கிவிட்டேன்
பெருமைகொண்டு அரங்கன் தொண்டர்படை
பேருலகமெங்கும் கிளைச் சங்கங்களாக

9. ஆகவே தொடர்ந்து சேவையாற்றி அரங்கன்பேரை சொல்லிவந்தால் போதும்
ஆறுமுகன்யான் மாற்றத்தை தருவேன்அகிலத்துக்கு அற்புதமான ஞானத்தலைமை
வரமாக ஆறுமுகன் என்னாசிபட
வல்லமைகொண்ட ஞான ஆட்சியும் வழங்குவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–